**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடலூர்,**

**முன்னிலை : திரு. ப. முருகேசன், பி.எல்.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கூடலூர்.**

**2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 09-ஆம் நாள் செவ்வாய் கிழமை**

**(2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ பராபவ வருடம், வைகாசி மாதம் 26-ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண். 40/2018**

**CNR.No.TNNS070005222018**

கே.ஏ.ஆண்டனி ... வாதி

// எதிர் //

எம்.ஜே.செரியன் ... பிரதிவாதி

இவ்வழக்கு கூடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 01.08.2018-ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு நீலகிரி மாவட்ட நீதிமன்றம் உத்தரவு படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. இவ்வழக்கானது 01.06.2026-ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.சி.சாக்கோ அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டி.முரளிதரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இவ்வழக்கு சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று 09.06.2026-ஆம் தேதி இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:23:04 +0530

**தீர்ப்புரை**

தாவா சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீனம் மற்றும் அனுபோகத்தை பிரதிவாதி, அவரது நபர்கள் அல்லது முகவர்கள் அல்லது பணியாளர்கள் அல்லது உரிமை கோரும் எந்தவொரு நபரும் அத்துமீறி உள்ளே நுழைதல் அல்லது எந்த வழியிலும் தடையிடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.

**2). வழக்குரையின் சுருக்கம் :**

**(i).** வாதி தாவா சொத்தின் முழு உரிமையாளர் ஆவார். நிலத்தை எல்லம்மாகல்லுமடியல் என்பவர் நடுவாதுமனா என்பவரிடம் இருந்து குத்தகை உரிமையை ஊட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.520/1952 மூலம் கிரயம் பெற்று இருக்கிறார். அதன் பின்பு கூடலூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.98/1967 மூலம் எல்லம்மாள் தன்னுடைய உரிமையை அகஸ்டின் என்பவருக்கு மாற்றி இருக்கிறார்.

**(ii).** மொத்த வீஸ்தீரணம் 26 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை மேற்படி அகஸ்டினிடமிருந்து வாதியின் குடும்ப உறுப்பினர்கள், அதாவது இறந்துபோன மேரிசெரியன் 10 ஏக்கர், வாதி 5 ஏக்கர், வாதியின் சகோதரர் பிலிப் 5 ஏக்கர் மற்றும் பாதர் ஜோசப் 6.40 ஏக்கர் கிரயம் பெற்று இருக்கிறார்கள். மேரி செரியனின் 7 ஏக்கர் நிலத்தை பொறுத்து பல்வேறு உரிமை மாற்றம் மூலம் விற்பனை செய்து இருக்கிறார். அவரது மறைவுக்கு பின்பு மேரி செரியனின் சட்டப்பிரதிநிதிகளான பிரதிவாதி மற்றும் அவரது

இரண்டு குழந்தைகள் மீதமுள்ள 3 ஏக்கர் நிலத்தை கூட்டாக சுவாதீன அனுபோகம் செய்து வருகிறார்கள்.

**(iii).** தாவா சொத்தின் பகுதியை வாதியின் கிரயதாரரிடம் இருந்து கிரயம் பெறுதற்கு பிரதிவாதியின் மகன் முன்னெடுப்பு எடுத்தார். கிரய மறுபயன் தொகை செலுத்தாதால் அது தோல்வியில் முடிந்தது. அதன் பின்பு பாதர் ஜோசப் கிரய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டார். அதன் பின்பு தாவா சொத்தை வாதிக்கு 23.08.2016ஆம் தேதி பாதர் ஜோசப் மறுபயனுக்கு விற்பனை செய்தார். பிரதிவாதியின் மகன் தாவா நிலத்திற்கு அந்நியர். அவர் தரப்பில் தொந்தரவும் எதுவும் இல்லை.

**(iv).** வாதி தாவா சொத்தை கிரயம் பெற்ற தேதியில் இருந்து தேயிலை தோட்டம் அதன் இடையிடையே தென்னை, பாக்கு மற்றும் மிளகு பயிரிட்டு தாவா செத்தினை சுவாதீனம் மற்றும் அனுபோகம் செய்து வருகிறார். வீட்டு வரி விதிப்பை வாதியின் கிரயதாரரின் பெயரில் இருந்து வாதியின் பெயருக்கு மாற்ற கிராம பஞ்சாயத்தில் மனு கொடுத்து, அது நிலுவையில் இருந்து வருகிறது.

**(v).** தாவா சொத்தில் பணியாற்றிய வேலையாள் கூலி பிரச்சினைக்காக பிரச்சினையை உருவாக்க முயற்சி செய்தார். அதனால் அவருக்கு எதிராக நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி வாதி அ.வ.எண்.86/2016 வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி வாதியின் உறவினர் ஆவார். ஆனால் இரத்த உறவு இல்லை. அவர் மற்றவர்களுடன் சேர்ந்து நில அபகரிப்பு செய்ய முயற்சி செய்து வருகிறார்.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:23:13 +0530

**(vi).** பிரதிவாதி, வாதி, அவரது சகோதரர் மற்றும் பிரதிவாதியின் சகோதரர் பாதர் ஜோசப் கிரயம் பெற்ற சொத்து உள்ளடங்களான சொத்துக்களை பொருத்து பாகபிரிவினை கோரி ஊட்டி மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.56/1998 வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. பிரதிவாதி வீட்டு வரி விதிப்பை தன்னுடைய மகன் பெயருக்கு மாற்றம் செய்ய முயற்சி செய்தார். அதனை பாதர் ஜோசப் உரிய நேரத்தில் தலையிட்டு சேரங்கோடு பஞ்சாயத்தில் பிரதிநிதித்துவம் செய்து ரத்து செய்து மீண்டும் வாதியின் கிரயதாரர் பெயரில் மாற்றி இருக்கிறார்.

**(vii).** கடந்த 27.03.2018ஆம் தேதி பிரதிவாதி மற்றும் அவரது இரண்டு பணியாளர்கள் தாவா சொத்திற்குள் வந்து ஆயிரம் தேங்காய்களை பிடுங்கி இருக்கிறார். உடனடியாக வாதி காவல் நிலையத்தில் பிரதிவாதிக்கு எதிராக புகார் அளித்தார். பிரதிவாதியின் குற்ற நடவடிக்கை பொருத்து மன்னிப்பு கோரியதால் வாதி சிறிது சமாதானம் அடைந்தார். மீண்டும் 10.04.2018ஆம் தேதி பிரதிவாதி தாவா சொத்திற்குள் வந்து வாதியின் மேற்பார்வையாளரை மிரட்டி இருக்கிறார். தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கு எவ்வித உரிமை, உரிமை மூலம் அல்லது அக்கறை எதுவும் இல்லை. பிரதிவாதி தாவா சொத்திற்குள் அத்துமீறி உள்ளே நுழைய தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறார். அதனால் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்காட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:23:17 +0530

**3). எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

**(i).** தாவா வழக்கு பொய்யானது, அற்பதமானது, அலைக்கழிவானது. சட்டம் அல்லது பொருண்மைகள் படி வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. வழக்குரை சங்கதிகளில் பிரதிவாதியால் குறிப்பாக ஒப்புக்கொள்ளபடும் சங்கதிகள் தவிர வழக்குரை மற்ற சங்கதிகள் அனைத்தையும் வாதியே கண்டிப்பாய் நிரூபித்துகொள்ள வேண்டும்.

**(ii).** சேரங்கோடு கிராமம் R.S.No.496/15B-ல் உள்ள கதவு எண்.6/215B வீட்டினை பொருத்து எவ்வித உரிமை அல்லது உரிமை மூலம் அல்லது சுவாதீனம் எதுவும் வாதிக்கு இல்லை. 1975ஆம் ஆண்டு முடிவில் பிரதிவாதி 26 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை பொருத்து அதன் உரிமையாளர் தலையத்து அகஸ்டினிடம் கிரய ஒப்பந்தம் செய்திருக்கிறார். அதன் பின்பு 19.02.1977ஆம் ஆண்டு ஆவண எண்.129/1997 மூலம் பிரதிவாதியின் மனைவி மேரிசெரியன் மற்றும் பிரதிவாதியின் சகோதரர் பாதர் ஜோசப் ஒரு தரப்பினராக மேற்கு பகுதியில் உள்ள 16 ஏக்கர் 40 செண்ட் நிலம் ஒரே சொத்தாக கிரயம் பெற்றிருக்கிறார்கள். மலை உச்சியில் உள்ள 10 ஏக்கர் நிலம் வாதி உள்ளிட்ட இரு மருமகன்கள் பெயரில் திட்ட வரைபடத்துடன் கிரயம் பெறப்பட்டிருக்கிறது. அனைத்து பகுதியும் அகஸ்டின் தலையத் எஸ்டேட்டால் கைவிடப்பட்டதாகும். அந்த நேரத்தில் பிரதிவாதி கல்லூரி மாணவர். அதனால் சொத்தை கிரயம் பெறவில்லை. அந்த சொத்திற்கும், பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அசல்

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:23:20 +0530

ஆவணங்கள் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி மற்றும் தேஜஸ் என்பவரிடம் இருக்கிறது.

**(iii).** பிரதிவாதியின் மகன் தேஜஸ் செரியன், பாதர் ஜோசப்பிடம் சொத்தை கிரயம் எதுவும் பெறவில்லை. மேலும், தாவா சொத்தின் விற்பனையை தமிழ்நாடு அரசு தடை செய்துள்ளது. ரூ.100/-க்கும் மேற்பட்ட மதிப்புடைய அசையா செத்து சொத்துரிமை மாற்று சட்டம் படி பதிவு செய்யபடாமல் விற்பனை செய்ய முடியாது. 23.08.2016ஆம் தேதி தேஜஸ் செரியன் சுவாதீனத்தில் இருந்த கதவு எண்.6/215B வீடு மற்றும் நிலத்தினை வாதி கிரயம் பெற்றதாக உரிமை கோருவது பொய் மற்றும் சட்டப்படி நடக்கக்கூடியதல்ல. கூடலூர் சார்பதிவாளர் அலுவலக 29.12.1980ஆம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எண்.1572/1980 பிரதிவாதியின் பெயரில் உள்ளது. அதில் வெளி ஆளான வாதியின் அனைத்து கோரிக்கையும் உறுதிபடுத்தபட்டுள்ளது.

**(iv).** வாதி மற்றும் அவரது சகோதரர் தலா 5 ஏக்கர் நிலத்தை அவரது பினாமி சொத்தாக 1977ஆம் ஆண்டு விற்பனை செய்ய முயற்சி செய்தார். அதனை பிரதிவாதி தடுத்து அவரது மனைவி மேரி செரியன் வேண்டுகோளின் பேரில் அ.வ.எண்.56/1998 மற்றும் அ.வ.எண்.132/1998 தாக்கல் செய்தார். அவ்வழக்கு சமாதானம் ஏற்ப்பட்டு பிரதிவாதி புதிய வழக்கு தாக்கல் செய்ய உரிமை வழங்கப்பட்டது. வீடு மற்றும் நிலத்தை தேஜஸ் செரியனின் தாயார் மேரி செரியன் அவரது தகப்பனார் கொடுத்த வரதட்சணை பணத்தை பயன்படுத்தி கிரையம் பெற்று இருக்கிறார். வாதி வெளிஆள் தேஜஸ் செரியனின் தந்தை மற்றும் தாயார் உருவாக்கிய சொத்து மற்றும் வீடு

குறித்தும் பாதிரியார் ஜோசப் பேரில் ஆவணம் பெறப்பட்டது குறித்தும் கேள்வி எழுப்ப வாதிக்கு எவ்வித உரிமையும், உரிமை மூலமும் இல்லை. வாழ்நாள் முழுவதும் திருமணம் ஆகாமல் பாதிரியாராக வாழ்வதற்கு நம்பிக்கை மற்றும் அந்தஸ்தை கொடுப்பதற்காக சொத்து பதிவு செய்யப்பட்டது. வீட்டு வரி விதிப்பு ஜோசப் பெயரில் ஏற்படுத்தப்பட்டது. அவரது காலத்திற்கு பின்பு சொத்து இயல்பாகவே பிரதிவாதி அல்லது அவரது மகனுக்கு திரும்பக் கிடைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அவ்வாறு செய்யப்பட்டது.

(v). பிரதிவாதி தன்னுடைய மனைவியின் நிலத்தில் இருந்து கிடைக்கும் பயன் உரிமைகளை எடுத்துக் கொள்வதற்கு வாதியின் அனுமதி தேவையில்லை. வாதி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். அதனால் வாதியின் வழக்கை அதிகப்படியான செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4). இவ்வழக்கில் தரப்பினர்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரை, எதிர் வழக்குரை மற்றும் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்து இவ்வழக்கை தீர்வு செய்வதற்கு, இந்நீதிமன்றம் 02.07.2024-ஆம் தேதி கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்திருக்கிறது.

**1) Whether the plaintiff is an absolute owner of the suit schedule property ?**

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:23:27 +0530

2) **Whether the plaintiff is in exclusive possession over the suit schedule property ?**

3) **Whether the plaintiff entitled relief of Permanent Injunction against the defendant over the suit schedule property ?**

4) **Whether the plaintiff entitled costs of the suit ? and**

5) **To what other relief the parties entitled for ?**

**5).** வாதி தரப்பில் வா.சா.1, வா.சா.2 விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.24 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. வா.சா.1-ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் மூலம் பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>6). எழுவினாக்கள் 1முதல் 3-ற்கான தீர்வு :</u>**

**(i).** தாவா சொத்தை வாதி, பாதர் ஜோசப்பிடமிருந்து 23.08.2016ஆம் தேதி கிரயம் பெற்று சுவாதீன அனுபோகம் செய்து வருவதாகவும், தாவா சொத்தில் வாதியின் சுவாதீன அனுபோகத்தை பிரதிவாதி 27.03.2018, 10.04.2018ஆம் தேதி தடையிடைஞ்சல் செய்ததால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்திருக்கிறார் என்பது வழக்குரை சங்கதிகள் மூலம் தெரியவருகிறது.

P.
MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:23:31 +0530

**(ii).** மேலும், தாவா சொத்தின் வாதியின் சுவாதீன அனுபோகத்தை நிரூபிக்க வேண்டி வாதி தரப்பில் வாதி வா.சா.1-ஆகவும், மூன்றாம் தரப்பினர் வா.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1முதல்வா.சா.ஆ.24வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ.1 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 23.08.2016ஆம் தேதியிட்ட அ.வ.எண்.86/2016 வழக்கில் வாதி தாக்கல் செய்த பதிவு செய்யப்படாத கிரய ஆவணத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.2 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 17.02.1977ஆம் தேதியிட்ட அ.வ.எண்.86/2016 வழக்கில் வாதி தாக்கல் செய்த கிரய ஆவண எண்.129/1977 மற்றும் அதன் மொழிபெயர்ப்பின் நீதிமன்ற சான்றிட்ட நகல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.3 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் அ.வ.எண்.56/1998 வழக்கில் 28.06.2002ஆம் தேதி உதகமண்டலம் மாண்புமிகு சார்பு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.4 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் அ.வ.எண்.56/1998 இ.ம.எண்.440/1998-ல் 10.06.1998ஆம் தேதி உதகமண்டலம் மாண்புமிகு சார்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் நீதிமன்ற சான்றிட்ட நகல் என்பது தெரியவருகிறது.

**(iii).** வா.சா.ஆ.5 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 27.03.2018ஆம் தேதி சேரங்கோடு ஊராட்சி தனி அலுவலர் கொடுத்த கடிதம் மற்றும் ஜோசப் மாணிக்கதழேவின் மனு ஒளிநகல் இணைப்பு என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.6


P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.06.09 17:23:34 +0530

சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 11.04.2018ஆம் தேதி பாதர் ஜோசப் மாணிக்கதழே நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அளித்த புகார் மனு மற்றும் அஞ்சலக ரசீது என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.7 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 11.04.2018ஆம் தேதி பாதர் ஜோசப் மாணிக்கதழே நீலகிரி மாவட்ட ஆட்சியருக்கு அளித்த புகார் மனு மற்றும் அஞ்சலக ரசீது என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.8 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 11.04.2018ஆம் தேதி பாதர் ஜோசப் மாணிக்கதழே பந்தலூர் வட்ட வழங்கல் அதிகாரிக்கு அளித்த மனு என்பது தெரியவருகிறது.

**(iv).** வா.சா.ஆ.9 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 11.04.2018ஆம் தேதி பாதர் ஜோசப் மாணிக்கதழே சேரம்பாடி காவல் ஆய்வாளருக்கு அளித்த புகார் மனு மற்றும் அஞ்சலக ரசீது என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.10 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 10.04.2018ஆம் தேதி சேரம்பாடி காவல் உதவி ஆய்வாளருக்கு நாராயணன் அளித்த புகார் மனு ஒளிநகல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.11 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 01.06.2016ஆம் தேதியிட்ட கதவு எண்.6/215B-க்கு 2016-2017ஆம் வருடம் பாதர் ஜோசப் பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீது நீதிமன்ற சான்றிட்டநகல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.12 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 21.06.2018ஆம் தேதியிட்ட கதவு எண்.6/215B-க்கு 2018-2019ஆம் வருடம் பாதர் ஜோசப் பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீது நீதிமன்ற சான்றிட்ட அசல் என்பது தெரியவருகிறது.



P.
MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:23:38 +0530

**(v).** வா.சா.ஆ.13 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 16.02.2018ஆம் தேதி மின் இணைப்பு எண்.03411005113-க்கு பாதர் ஜோசப் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.14 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 27.10.2020ஆம் தேதி எம்.ஜே.ஜோசப் மணிகேத்தாழே இறந்துவிட்டதாக கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட இறப்பு சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.15 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 27.01.2022ஆம் தேதியிட்ட கதவு எண்.6/215B-க்கு வாதி பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.16 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 06.07.2018ஆம் தேதியிட்ட பாதர் ஜோசப் தாவா சொத்தை பொறுத்து வாதிக்கு எழுதி வைத்த பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் அசல் என்பது தெரியவருகிறது.

**(vi).** வா.சா.ஆ.17 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் வா.சா.ஆ.16 ஆவணத்தில் உள்ள வா.சா.2-ன் கையொப்பம் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.18 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் பாதர் ஜோசப் மற்றும் வாதி பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் வரிசை (மொத்த எண்ணிக்கை 5) அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.19 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் ராலியத்து, ஆண்டனி, பாதர் ஜோசப் பெயரில் செலுத்தப்பட்ட நிலவரி ரசீதுகள் வரிசை (மொத்த எண்ணிக்கை 11) அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.20 சான்றாவணத்தை

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:23:42 +0530

பரிசீலனை செய்கையில் பாதர் ஜோசப் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் வரிசை (மொத்த எண்ணிக்கை 9) அசல் என்பது தெரியவருகிறது.

**(vii).** வா.சா.ஆ.21 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் HP எரிவாயு இணைப்பு எண்.641240 அன்னி குருவில்லா பெயரில் 08.07.2025ஆம் தேதி வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.22 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 30.07.2025ஆம் தேதி கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட ரேசன் அட்டை Surrender / Cancellation சான்றிதழ் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.23 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 09.12.2025ஆம் தேதி பந்தலூர் வட்ட வழங்கல் அலுவலர் வாதிக்கு வழங்கிய கடிதக்குறிப்பு என்பதும், அதில் வாதியின் பெயரில் மின்னணு குடும்ப அட்டை எதுவும் பதிவு பெறவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதும் தெரியவருகிறது. வா.சா.ஆ.24 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 21.01.2026ஆம் தேதியிட்ட வாதி கூடலூர் கோல்டன் கேஸ் சர்வீஸ் மேலாளர் அவர்களுக்கு அளித்த கடிதம் என்பது தெரியவருகிறது.

**(viii).** தாவா சொத்து வாதியின் சுவாதீன அனுபோகத்தில் இல்லை என்று பிரதிவாதி தரப்பில் முக்கிய எதிர்வாதம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1-ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் மூலம் ஜோசப், மாணிகத்தாழ் ஆகியோர் பெயர் உள்ள குடும்ப அட்டை அசல் பி.வா.சா.ஆ.1 ஆகவும், தேஜஸ் செரியனின் எரிவாயு இணைப்பு அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது பி.வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

**(ix).** இவ்வழக்கின் தாவா சொத்தாக பந்தலூர் வட்டம், சேரங்கோடு கிராமம், புல எண்.105, விஸ்தீரணம் 6.40 ஏக்கர் மற்றும் அதிலுள்ள கதவு எண்.6/215B வீடு, அதன் நான்கு எல்லைகளாக தெற்கு - இறந்து போன மேரி செரியன் விற்பனை செய்த நிலம் மற்றும் சாலையின் முக்கோண சந்திப்பு, வடக்கு - ஜனகன் சுவாதீனத்தில் உள்ள நிலம், மேற்கு - தூய அந்தோணி தேவாலயத்திற்கு செல்லும் சாலை கிழக்கு - வாதியின் சகோதரர் பிலிப்பிடமிருந்து வாங்கிய வாதிக்கு சொந்தமான நிலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது.

**(x).** இந்திய சாட்சிய சட்டம் 1882 பிரிவு 101ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

101. Burden of proof. - Whoever desires any Court to give judgment as to any legal right or liability dependent on the existence of facts which he asserts, must prove that those facts exist. When a person is bound to prove the existence of any fact, it is said that the burden of proof lies on that person.

Illustrations

(a) A desires a Court to give judgment that B shall be punished for a crime which A says B has committed. A must prove that B has committed the crime.

(b) A desires a Court to give judgment that he is entitled to certain land in the possession of B, by reason of facts which he asserts, and which B denies, to be true. A must prove the existence of those facts.

**(xi).** மேலும், இவ்வழக்கில் வாதி தனது வழக்குரையில் வா.சா.ஆ.1 சான்றாவணம் மூலம் பாதர் ஜோசப்பிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்று சுவாதீன அனுபோகத்தில் இருந்து வருவதாக கூறியிருக்கிறார். அதனை, நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101-ன் கீழ் வாதிக்கு தான் இருக்கிறது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:23:49 +0530

**(xii).** மேற்படி வா.சா.ஆ.1 கிரய ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படாத கிரய ஆவணமாக இருக்கிறது என்பது தெரியவருகிறது. மேலும், சொத்துரிமை மாற்று சட்டம் பிரிவு 54-ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. **54. "Sale" defined.-**

**"Sale" is a transfer of ownership in exchange for a price paid or promised or part-paid and part-promised.**

**Sale how made.-**

**Such transfer, in the case of tangible immoveable property of the value of one hundred rupees and upwards, or in the case of a reversion or other intangible thing, can be made only by a registered instrument.**

**In the case of tangible immoveable property of a value less than one hundred rupees, such transfer may be made either by a registered instrument or by delivery of the property.**

**Delivery of tangible immoveable property takes place when the seller places the buyer, or such person as he directs, in possession of the property.**

**Contract for sale.—**

**A contract for the sale of immoveable property is a contract that a sale of such property shall take place on terms settled between the parties.**

**It does not, of itself, create any interest in or charge on such property.**

**(xiii).** மேற்படி சட்டப்பிரிவை பரிசீலனை செய்கையில் ரூ.100/- மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய அசையா சொத்தை பொறுத்து உரிமை மாற்றம் ஒரு பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் மூலமாகவே செய்யப்படவேண்டும் என்பது தெளிவாக தெரியவருகிறது. மேலும், பதிவு சட்டம் 1908 பிரிவு 17-ன் கீழ் ரூ.100/- மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய அசையா சொத்தை பொறுத்த உரிமை மாற்று ஆவணம்



P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:23:53 +0530

கண்டிப்பாக பதிவு செய்யப்பட வேண்டும் என்பது தெரியவருகிறது. வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் தாவா சொத்தின் கிரய மதிப்பு ரூ.15,00,000/- என்றும், மேற்படி ரூ.15,00,000/- கிரய மறு பயன் தொகையை வாதி, பாதர் ஜோசப்பிற்கு கொடுத்து, சொத்தின் சுவாதீனத்தை பெற்றதாக கூறியிருக்கிறார்.

**(xiv).** மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் **" நான் வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தின் அடிப்படையில் நான் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய சான்றாவணம் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 சான்றாவணம் நோட்டரி சான்றிட்ட நகல் என்று சொன்னால் சரிதான். "** என்று சாட்சியம் அளித்திருக்கிறார்.

**(xv).** அதனால், மேற்படி வா.சா.ஆ.1 சான்றாவணம் கண்டிப்பாக பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணம் என்பது தெரியவருகிறது. அதனால், பதிவு சட்டத்தின் படி பதிவு செய்யப்படாத வா.சா.ஆ.1 சான்றாவணத்தின் உள்ளடக்கத்தை ஆவண சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், வா.சா.ஆ.1 சான்றாவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வா.சா.ஆ.1 மூலம் வாதி தாவா சொத்தின் சுவாதீனம் மற்றும் அனுபோகம் செய்து வருகிறார் என்பது நம்பக்கூடியதாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(xvi).** மேலும், வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தில் 1)ஜோசப், 2)மேரிசெரியன் (பிரதிவாதியின் மனைவி), 3)வாதி கே.ஏ.அந்தோணி மற்றும் 4)கே.ஏ.பிலிப் ஆகியோர்

சேர்ந்து கூடலூர் வட்டம், சேரம்பாடி கிராமம், R.S.No.105, விஸ்தீரணம் 26 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை தலையத்து (எ) அகஸ்டின் என்பவரிடமிருந்து ரூ.17,160/- கிரய மறுபயனுக்கு வாங்கியிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. மேலும், வா.சா.ஆ.2 சான்றாவணத்தில் 1-வது நபரான ஜோசப் 6 ஏக்கர் 40 செண்ட், 2-வது நபரான பிரதிவாதியின் மனைவி மேரி செரியன் 10 ஏக்கர், 3-வது நபரான வாதி கே.ஏ.அந்தோணி 5 ஏக்கர், 4-வது நபரான கே.ஏ.பிலிப் 5 ஏக்கர் நிலம் விற்பனை செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கான தனித்தனி நான்கு எல்லைகள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. மொத்த சொத்தான 26 ஏக்கர் 40 செண்டுக்கு நான்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. மேலும், வா.சா.ஆ.2 சான்றாவணத்திற்கு பின்னிட்டு R.S.No.105-ல் கண்டுள்ள மொத்தம் 26 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை பொறுத்து மேற்படி நான்கு நபர்களுக்கு இடையே வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்தின் படி சொத்து தனித்தனியாக நான்கு எல்லைகள் குறிப்பிட்டு பிரிக்கப்பட்டதற்க்கான எவ்வித சான்றாவணங்களும் வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

**(xvii).** பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையில் தாவா சொத்தை விற்பனை செய்வதை தமிழக அரசு தடை செய்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் **"தாவா சொத்து சட்டம் 24/1969-ன் கீழான நிலம் என்றும், அதனால் அது அரசுக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால்**

**சரிதான். அதனால், தாவா சொத்திற்கு அரசாங்கம் வரி என்னிடம் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். "** என்று சாட்சியம் அளித்திருக்கிறார். அதனால், இவ்வழக்கு தாவா சொத்து சட்டம் 24/1969-ன் கீழான நிலம் என்பது தெளிவாக தெரியவருகிறது. இந்நிலையில் சட்டம் 24/1969-ன் கீழான ரயத்துவாரி பட்டா ஆவணங்கள் எதனையும் வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

**(xviii).** மேலும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12, வா.சா.ஆ.13, வா.சா.ஆ.20 சான்றாவணங்கள் பாதர் ஜோசப் பெயரில் இருக்கிறது. அதே போல வா.சா.ஆ.19 A.T.ராலியத் மற்றும் ஆண்டனி, பாதர் ஜோசப் பெயரில் தாக்கலாகி வருகிறது என்பதை அறியமுடிகிறது. மேலும், வா.சா.ஆ.15, வா.சா.ஆ.18, வா.சா.ஆ.21, வா.சா.ஆ.22, வா.சா.ஆ.24 சான்றாவணங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்த பின்பு பெறப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும், பி.வா.சா.ஆ.2 சான்றாவணத்தில் கதவு எண்.6/215B-ல் பிரதிவாதியின் மகன் தேஜஸ் செரியன் குடியிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. மேலும், வா.சா.ஆ.23 சான்றாவணத்தில் கதவு எண்.6/215B வீட்டிற்கு வாதிக்கு மின்னணு குடும்ப அட்டை எதுவும் பதிவு பெறவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் **"வா.சா.ஆ.23 சான்றாவணம் எதற்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்று கேட்டால் ரேஷன் அட்டை யாருக்கும் வழங்கப்படவில்லை என்பதற்காக நான் தாக்கல் செய்திருக்கிறேன். என்னுடைய குடும்ப அட்டை குறித்து தகவல் கோரி கொடுத்த**

**மனுவிற்கு அளிக்கப்பட்ட பதில் என்று சொன்னால் சரிதான். எங்கள் பெயரில் ரேஷன் அட்டை வழங்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான்."** என்று சாட்சியம் அளித்திருக்கிறார். அதனால், கதவு எண்.6/215B வீட்டிற்கு வாதி பெயரில் குடும்ப அட்டை எதுவும் வழங்கப்படவில்லை என்பது தெளிவாக தெரியவருகிறது.

**(xix).** மேலும், வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 சான்றாவணங்களில் வாதி தாவா சொத்தில் சுவாதீன அனுபோகத்தில் இருப்பதாக உறுதிபடுத்தி தீர்ப்பு, உத்தரவில் முடிவு எதுவும் சொல்லப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், புல எண்.105-ல் கண்டுள்ள வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட 6 ஏக்கர் 40 செண்ட் நிலத்தில் வாதி வழக்குரையில் கூறியுள்ள கதவு எண்.6/215B வீடு இருக்கிறது என்பதனையும், அந்த வீட்டிற்கு மின் இணைப்பு எண்.03411005113 கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் நிரூபிக்கக்கூடிய சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் முன்னிடப்படவில்லை என்பதும், இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வாதி தாவா சொத்தின் சுவாதீன அனுபோகத்தில் இருந்து வந்தார் என்பதற்கான வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் அல்லது அ பதிவேடு உள்ளிட்ட ஆவணங்கள் எதுவும் வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிடப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. அதனால், வாதி வா.சா.ஆ.1 கிரய ஆவணம் படி தாவா சொத்தின் சுவாதீனம் அடைந்து

அனுபோகம் செய்து வருகிறார் என்பது நம்பக்கூடியதாகவும், ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(xx).** மேலும், பாதர் ஜோசப் தாவா சொத்தை பொறுத்து வா.சா.ஆ.16 உயில் எழுதி வைத்திருப்பதாகவும், பாதர் ஜோசப் இறந்த பின்பு வா.சா.ஆ.16 உயில் அடிப்படையிலும் தாவா சொத்தின் சுவாதீன அனுபோகம் அடைந்திருப்பதாக சாட்சியம் அளித்திருக்கிறார். ஆனால், மேற்படி உயில் ஆவணம் குறித்து வழக்குரையில் எவ்வித விவரமும் வாதி தரப்பில் சொல்லப்படவில்லை. மேலும், பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1 கிரய ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றும், வா.சா.ஆ.1 மூலம் வாதி தாவா சொத்தின் சுவாதீன அனுபோகம் அடையவில்லை என்று முக்கிய எதிர்வாதம் எதிர்வழக்குரையில் எழுப்பப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.16 உயில் ஆவணம் மோசடியாக வாதியால் உருவாக்கப்பட்டிருப்பதாக பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் முக்கிய எதிர்வாதம் செய்யப்பட்டிருக்கிறது.

**(xxi).** மேலும், மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் **Anathula Sudhakar vs P.Buchi Reddy(dead) by Lrs. & Others, 2008 4 SCC 594** என்ற வழக்கில் 11.1) Where a plaintiff is in lawful or peaceful possession of a property and such possession is interfered or threatened by the defendant, a suit for an injunction simpliciter will lie. A person has a right to protect his possession against any person who does not prove a better title by seeking a prohibitory injunction. But a person in wrongful possession is not entitled to an injunction against the rightful owner.
11.2) Where the title of the plaintiff is not disputed, but he is not in possession, his remedy is to file a suit for possession and seek in addition, if necessary, an

injunction. A person out of possession, cannot seek the relief of injunction simpliciter, without claiming the relief of possession.

11.3) Where the plaintiff is in possession, but his title to the property is in dispute, or under a cloud, or where the defendant asserts title thereto and there is also a threat of dispossession from defendant, the plaintiff will have to sue for declaration of title and the consequential relief of injunction. Where the title of plaintiff is under a cloud or in dispute and he is not in possession or not able to establish possession, necessarily the plaintiff will have to file a suit for declaration, possession and injunction. என்று கூறியிருக்கிறது.

**(xxii).** மேலும், தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கு எதிராக வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருக்கிறார். மேலும், வா.சா.ஆ.2 மூலம் R.S.No.105-ல் கண்டுள்ள மொத்த சொத்தான 26 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை வாதி, பிரதிவாதியின் மனைவி உள்ளிட்ட நான்கு நபர்கள் கிரயம் பெற்றிருக்கிறார்கள். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ளபடி சொத்தினை தரப்பினர்கள் பிரித்து கொண்டதற்கான எவ்வித சாட்சிய சான்றாவணங்களையும் வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிடப்படவில்லை.

**(xxiii).** மேலும், வா.சா.ஆ.1 கிரய ஆவணம் அல்லது வா.சா.ஆ.16 உயில் ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து வாதிக்கு உரிமை மூல பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் எதுவும் வாதி இவ்வழக்கில் கோரவில்லை. ஆனால், தாவா சொத்தின் சுவாதீனம் மற்றும் உரிமை மூலம் வாதிக்கு உள்ளது என்பதனை பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையில் முற்றிலும் மறுக்கப்பட்டிருக்கிறது. அதனால்,

தாவா சொத்தின் உரிமை மூலம் குறித்து வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே ஒரு பிரச்சினை எழுகிறது என்பது தெரியவருகிறது. அதனால், தாவா சொத்தை பொறுத்து வாதிக்கு உரிமை மூலம் இருக்கிறதா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியது அவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(xxiv).** ஆனால், தாவா சொத்தை பொறுத்து வாதியின் உரிமை மூலத்தை பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை செய்யக்கோரி பரிகாரம் எதுவும் இவ்வழக்கில் வாதி கோரவில்லை. மேலும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில், இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா முழு சொத்தின் சட்டப்படியான சுவாதீன அனுபோகத்தில் வாதி இருந்தாரா, இல்லையா என்பது குறித்தும், அதனை பிரதிவாதி தடையிடைஞ்சல் செய்தாரா, இல்லையா என்பது குறித்தும் மட்டுமே தீர்மானிக்க வேண்டியதாக இருக்கிறது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனால், தாவா சொத்தின் முழு உரிமையாளர் வாதியா இல்லையா என்பது குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் தீர்மானிக்க தேவையில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், தாவா சொத்தை பொறுத்து வாதி விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(xxv).** அதனால், தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில்


P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.06.09 17:24:20 +0530

தாவா சொத்தின் உரிமையாளர் யார் என்பது குறித்து தீர்மானிக்க முடியாது என்றும், வாதி இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்தில் சட்டப்படி தனித்த சுவாதீன அனுபோகத்தில் இருந்து வந்தார் என்பதனை வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், அதனால் வாதி வழக்குரையில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதற்கு உரிமையுடையவர் அல்ல என்றும் இவ்வழக்கு எழுவினாக்கள் 1 முதல் 3-றக்கு வாதிக்கு பாதகமாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**7). எழுவினா 4 - ற்கான தீர்வு :**

வாதி வழக்குரையில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதற்கு உரிமையுடையவர் அல்ல என்று இவ்வழக்கு எழுவினா 3-றக்கு வாதிக்கு பாதகமாக இந்நீதிமன்றம் தீர்வு கண்டிருக்கிறது. அதனால், வாதி இவ்வழக்கின் செலவுத்தொகையை பிரதிவாதியிடமிருந்து பெறுவதற்கு உரிமையுடையவர் அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இவ்வழக்கு எழுவினா 4-றக்கு வாதிக்கு பாதகமாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**8). எழுவினா 5 - ற்கான தீர்வு :**

வாதி வழக்குரையில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் அல்ல என்று இந்நீதிமன்றம் இவ்வழக்கு எழுவினா 3-றக்கு வாதிக்கு பாதகமாக தீர்வு கண்டிருக்கிறது. பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கில் எவ்வித எதிர்கோரிக்கை பரிகாரமும் கோரவில்லை. அதனால்,

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:24:24 +0530

தரப்பினர்களுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல என்று இவ்வழக்கு எழுவினா 5-ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9). முடிவாக, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு பிறப்பிக்கப்படுகிறது. வாதி, பிரதிவாதியின் உறவுமுறையையும், வழக்கின் தன்மையையும் கருத்தில் கொண்டு செலவுத்தொகை இல்லை என்று உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 09.06.2026ஆம் தேதி செவ்வாய் கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:24:28 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**கடலூர்.**

**வாதி தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| **வா.சா.1** | கே.ஏ.ஆண்டனி |
| **வா.சா.2** | நாராயணன் |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணத்தின் பெயர்** | **தன்மை** |
|---|---|---|---|
| **வா.சா.ஆ.1** | 23.08.2016 | பதிவு செய்யப்படாத கிரய ஆவணம் | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| **வா.சா.ஆ.2** | 17.02.1977 | கிரய ஆவணம் | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| **வா.சா.ஆ.3** | 28.06.2002 | அ.வ.எண்.56/1998 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை | நீதிமன்ற சான்றிட்ட நகல் |

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:24:32 +0530

| | | | |
|---|---|---|---|
| **வா.சா.ஆ.4** | 10.06.1998 | அ.வ.எண்.56/1998-ன் இ.ம.எண்.440/1998-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| **வா.சா.ஆ.5** | 27.03.2018 | கடிதம் | ஒளிநகல் |
| **வா.சா.ஆ.6** | 11.04.2018 | புகார் மனு & அஞ்சல் ரசீது | அசல் |
| **வா.சா.ஆ.7** | 11.04.2018 | புகார் மனு & அஞ்சல் ரசீது | அசல் |
| **வா.சா.ஆ.8** | 11.04.2018 | மனு | அசல் |
| **வா.சா.ஆ.9** | 24.04.2018 | புகார் மனு & அஞ்சல் ரசீது | அசல் |
| **வா.சா.ஆ.10** | 10.04.2018 | புகார் மனு | ஒளிநகல் |
| **வா.சா.ஆ.11** | 01.06.2016 | வீட்டு வரி ரசீது | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| **வா.சா.ஆ.12** | 21.06.2018 | வீட்டு வரி ரசீது | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| **வா.சா.ஆ.13** | 16.02.2018 | மின் கட்டண ரசீது | அசல் |
| **வா.சா.ஆ.14** | 05.12.2024 | இறப்பு சான்றிதழ் | கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது |
| **வா.சா.ஆ.15** | 27.01.2022 | வீட்டு வரி ரசீது | அசல் |
| **வா.சா.ஆ.16** | 06.07.2018 | பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் | அசல் |
| **வா.சா.ஆ.17** | 06.07.2018 | வா.சா.2-ன் கையொப்பம் | அசல் |
| **வா.சா.ஆ.18** | - | வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 5) | அசல் |
| **வா.சா.ஆ.19** | - | நிலவரி ரசீதுகள் (எண்ணிக்கை 11) | அசல் |
| **வா.சா.ஆ.20** | - | மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 9) | அசல் |
| **வா.சா.ஆ.21** | 08.07.2025 | எரிவாயு இணைப்பு புத்தகம் | ஒளிநகல் |

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:24:35 +0530

| | | | |
|---|---|---|---|
| **வா.சா.ஆ.22** | 30.07.2025 | குடும்ப அட்டை Surrender / Cancellation சான்றிதழ் | கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| **வா.சா.ஆ.23** | 09.12.2025 | கடிதக்குறிப்பு | அசல் |
| **வா.சா.ஆ.24** | 21.01.2026 | கடிதம் | ஒளிநகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** இல்லை

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணத்தின் பெயர்** | **தன்மை** |
|---|---|---|---|
| **பி.வா.சா.ஆ.1** | - | குடும்ப அட்டை | அசல் & ஒளிநகல் |
| **பி.வா.சா.ஆ.2** | - | எரிவாயு இணைப்பு புத்தகம் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:24:39 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**கடலூர்.**

| வரைவு / உண்மை தீர்ப்புரை | |
|---|---|
| **கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்** | |
| அசல்வழக்கு எண் | 40/2018 |
| தேதி | 09.06.2026 |